


தலைமைச் செயலகத்தில் நேற்று (16.03.2026) தலைமை தேர்தல் அதிகாரி / அரசு முதன்மை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தலைமையில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி / அரசு சிறப்பு செயலாளர் அ.சிவஞானம், கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி / அரசு கூடுதல் செயலாளர் வே.ஸ்ரீதர், இணை தலைமை தேர்தல் அதிகாரி (SVEEP) இரா. மேனுவல் ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஒகேனக்கல் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம்!

# 3 ஆம் கட்டப் பணிகளுக்கு நிதி ரூ.2,283 கோடியை விடுவிப்பீர்!

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 17 -
தமிழ்நாட்டில் ஒகேனக்கல் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் மூன்றாம் கட்ட பணிகளுக்குண்டான ஒன்றிய அரசின் பங்கான ரூ. 2,283 கோடியை விடுவிக்க மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தினார்.

ஒகேனக்கல் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் மூன்றாம் கட்ட பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் பங்கான ரூ.2,283 கோடியை தராமல் இருந்ததால், அத்திட்டம் மந்தகதியில் செயல்பட்டு வருகிறது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரம் மற்றும் தற்போதைய நிலை என்ன?

மேற்படி திட்டத்தை செயல்படுத்துவதற்கு நிலுவையில் உள்ள நிதியை விரைவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டங்களுக்கு நிதியளிக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என டி.எம்.



கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் ஜல் சக்திக்கான ராஜாங்க அமைச்சர் வி.சோமன்னா எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

ஆகஸ்ட் 2019 முதல், இந்திய ஒன்றிய அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து, நாட்டின் ஒவ்வொரு கிராமப்புற வீடுகளுக்கும் பாதுகாப்பான மற்றும் போதுமான குழாய் நீர் இணைப்பை வழங்குவதற்காக, மத்திய அரசின் ஜல் ஜீவன் மிஷன் (ஜேஜேஎம்) அனைத்து வீடுகளுக்கும் பைப் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

ஐந்தாண்டுகளுக்கு அதாவது 2019-20 முதல் 2023-24 வரை JJMஐ செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது, இதன் போது மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்களைத் திட்டமிடுதல், ஒப்புதல், செயல்படுத்துதல் ஆகியவற்றை முடிக்க வேண்டும். JJM இன் கீழ் மத்திய ஆதரவு பணி காலத்தில் பெறப்படும் நிதிக்கு மட்டுமே என்று மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான திட்ட அனுமதிக் குழு (SLSSC) ஜுன் 2023 இல், ஒகேனக்கல் நீர் வழங்கல் திட்டம், கட்டம் IIIக்கு ஒப்புதல் அளித்தது; இருப்பினும், பணி காலத்திற்குள் திட்டத்தை வழங்க முடியவில்லை.

நிதியமைச்சர் தனது 2025-26 பட்ஜெட் உரையின் போது JJM 2028 வரை நீட்டிக்கப்படுவதாக அறிவித்தார்.

குடிநீர் என்பது மாநில அரசின் அதிகார வரம்புக்குள் அங்கமாக இருப்பதால், குடிநீர் விநியோகத் திட்டங்களைத் திட்டமிட்டு, வடிவமைத்து, ஒப்புதல் அளித்து செயல்படுத்துவது மாநிலங்களே. இந்திய அரசு மாநில அரசின் முயற்சிகளுக்கு துணை புரிகிறது

தொழில்நுட்பம், நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் மாநிலங்கள். எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக மாநிலங்கள் முழுவதும் பல்வேறு நிலைகளில் ஒரே நேரத்தில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், கிராமப்புற குடிநீர் வழங்கலுக்கான தனிப்பட்ட திட்டங்கள்/திட்டங்களின் திட்ட வாரியான விவரங்கள் மாநில அரசு மட்டத்தில் பராமரிக்கப்படுகின்றன.

பணிக் காலத்தில், வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற வீடுகளுக்கு குழாய் நீர் இணைப்புகளை வழங்குவதற்காக பல்வேறு கிராமப்புற குடிநீர் விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசால் தமிழகத்திற்கு ரூ.5,899.53 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

---

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட வட்ட கழக, கிளை கழக செயலாளர்கள் - BLA-2 கள் பங்குபெறும் - ஆலோசனைக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்ட - மாநகர ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் வட்டகழக, கிளைகழகசெயலாளர்கள் மற்றும் BLA-2 கள்ஆலோசனை கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில் கீழ்கண்ட அட்டவணையின்படி நடைபெறும்.

| வ. எண் | நாள்/ நேரம் | கழக நிர்வாகம் செயலாளர்கள் | நிர்வாக பொறுப்பாளர்கள் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 17-03-2026 காலை: 9:00 மணி | திருவேற்காடு நகரம் NEK மூர்த்தி | த.எத்திராஜ் | நகர கழக அலுவலகம் |
| 2 | 17-03-2026 காலை: 11:00 மணி | பூவிருந்தவல்லி நகரம் GR திருமலை | கப்பல் கே.சுரேஷ்குமார் | நகர கழக அலுவலகம் |
| 3 | 17-03-2026 மதியம்: 12:00 மணி | திருமழிசை பேரூர் தி.வே.முனுசாமி | ஜி. விமல்வர்ஷன் நடுக்குத்தகை எம்.மோகன் | பேரூர் கழக அலுவலகம் |
| 4 | 17-03-2026 மாலை: 3:00 மணி | ஆவடி மாநகரம் சண்.பிரகாஷ் | வெங்கல் வி.ஜெ.சீனிவாசன் எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், ஒ.ஆர்.நாகூர் கணி | (War Room) ஆவடி ரயில் நிலையம் |
| 5 | 17-03-2026 மாலை: 5:00 மணி | திருநின்றவூர் நகரம் தி.வை.இரவி | எம்.குமார் வே.தியாகராஜன் | மாவட்ட அவைத் தலைவர் இல்லம், நடுகுத்தகை |
| 6 | 17-03-2026 மாலை: 6:00 மணி | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் ப.ச.கமலேஷ் | காஞ்சனா சுதாகர் எஸ்.சங்கர் | வி.எஸ்.மஹால் சென்னீர்குப்பம் |
| 7 | 17-03-2026 மாலை: 7:00 மணி | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் டி.தேசிங்கு | எம்.முத்தமிழ் செல்வன் ஜி.துர்காபிரசாத் | ஒன்றிய கழக அலுவலகம் கூடப்பாக்கம் |
| 8 | 18-03-2026 காலை: 8:00 மணி | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் சேபிரேம் ஆனந்த் | நடுகுத்தகை கே.ஜே.ரமேஷ் | ஒன்றிய கழக செயலாளர் இல்லம் |
| 9 | 18-03-2026 காலை: 10:00 மணி | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் ஆர்.ஜெயசீலன் | ப.குமரேசன் | லக்ஷ்மி மஹால் |
| 10 | 18-03-2026 மதியம்: 12:00 மணி | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் டி.முரளிகிருஷ்ணன் | ஜெ.மகாதேவன் சங்கீதா சீனிவாசன் | RM கெஸ்ட் ஹவுஸ் காக்களூர் |
| 11 | 18-03-2026 மாலை: 4:00 மணி | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் தங்கம் முரளி | காயத்திரி ஸ்ரீதர் | ஒன்றிய கழக செயலாளர் இல்லம் |

மேலும் இக்கூட்டத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் திரு கே ஜே ரமேஷ், மாநில தொழிலாளர் அணி செயலாளர் பூவிருந்தவல்லி தொகுதி பார்வையாளர் PTC செல்வராஜ், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் ஆவடி தொகுதி பார்வையாளர் செல்வி நிவேதா ஜெசிகா மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம். முத்தமிழ்செல்வன், காஞ்சனாசுதாகர், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.சங்கர் ஆகியோர் அவரவர்பொறுப்பாளர்களாக உள்ளகழக நிர்வாகங்களில் முன்னிலை வகிக்கிறார்கள்.

அது சமயம் ஆலோசனை கூட்டத்திற்கு அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

16.03.2026 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் விவாதித்த பொருள் குறித்து,

தேர்தல் பணிகள் குறித்து.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

---

## திராவிட மாடல் அரசை மீண்டும் கொண்டு வருவோம்! – வருகிற தேர்தலில்

# எடப்பாடி பழனிசாமியின் துரோகச் செயலுக்கு தக்க பாடம் புகட்டுவோம்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 17-
வருகிற தேர்தலில் திராவிட மாடல் அரசை மீண்டும் கொண்டு வருவோம் என்றும், பா.ஜ.க.வுடன் இணைந்து தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் இழைக்கும் எடப்பாடி பழனிசாமிக்கு வருகிற தேர்தலில் தக்க பாடம் புகட்டுவோம் எனவும், நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தியாவில் முதல் முதலமைச்சராக



ஏழைகளின் தலைவனாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்தவர் இன்று அவர் வழியில் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், நமது தமிழக மக்கள் தலைவர் இலவசமாக விவசாயிகளுக்கு 50,000 புதிய மின் இணைப்பு வாங்கி எதிரிகளின் விரோத செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து திராவிட மாடல் ஆட்சி என்பதை நிரூபித்தார்.

ஜெயலலிதா உதய் திட்டத்தை மக்களுக்கு எதிரான திட்டம் என்று எதிர்த்தார். ஆனால் இன்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அதே உதய் திட்டத்தை தனது சுயநலத்துக்காக ஒன்றிய அரசுக்கு தாரை வார்த்ததை தமிழக மக்கள் மறக்கவில்லை.

2017-இல் தமிழக மின்சார உரிமையை பறித்ததை தமிழக மக்கள் ஞாபகப்படுத்துகிறார்கள். எடப்பாடி பழனிசாமி தமிழக மக்களின் துரோகத்திற்கு தலைவன் என்பதை தமிழக வாக்காளர்கள் யாரும் மறந்து விடக்கூடாது. துரோகத்தையும், வஞ்சகத்தையும் விரட்டிடுவோம்!

வருகிற தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணிக்கு தக்க பாடம் புகட்டி, திராவிட மாடல் அரசை மீண்டும் உருவாக்கிட அயராது பாடுபடுவோம். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை மீண்டும் முதல்வராக அமர்த்துவோம். வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டத்தில் உள்ள 300 இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீருடைகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார். 17 வது வார்டு உதவி பொறியாளர் தினேஷ்,17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன், பாக முகவர் டி.திவாகர், 17வது வட்ட இளஞர்அணி அமைப்பாளர் எம்.என்.தளபதி, துணை அமைப்பாளர்கள் வி.விஷ்ணு, அ.அரவிந்தன், ச.பிரசாந்த், ச.லோகேஷ், கா.பாலாஜி, செ.திலீப், மு.தருண் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

---

## ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளுக்கே மீண்டும் பதவி!

# எந்த அளவுகோலில் நீட்டிப்பு? ஒன்றிய அரசின் நடைமுறை என்ன?

## மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், மார்ச் 17 -
ஒன்றிய அரசு அதிகாரிகளுக்குஓய்வுவயதைத்தாண்டியும் பதவிக்காலம் நீட்டிப்பு வழங்கப்படுவது மற்றும் ஓய்வுக்குப் பிறகு மீண்டும்பணியில்அமர்த்தப்படுவது தொடர்பாக மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்துகொண்டு ஒன்றிய அரசிடம் எழுப்பிய கேள்வியில், கடந்த ஐந்து ஆண்டுகளில் நிர்ணயிக்க ப்பட்ட ஓய்வு வயதைத் தாண்டி பதவிக்காலம் நீட்டிக்கப்பட்ட அல்லது ஓய்வு பெற்ற பிறகு மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட ஒன்றிய அரசு அதிகாரிகள் எத்தனை பேர் உள்ளனர். மேலும், ஆண்டு வாரியாக அதன் விவரங்களையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன், இவ்வாறு பதவிக்காலம்நீட்டிக்கப்பட்ட அதிகாரிகள்எந்தெந்தபதவிகளில்பணியாற்றினர்,அவர்கள் பணி யாற்றிய காலம், வழங்கப்பட்ட சேவை நீட்டிப்பு காலம் என்ன என்பதையும், ஓய்வுக்குப் பிறகு மீண்டும்பணியில்அமர்த்தப்பட்டிருந்தால் அவர்கள் தற்போது வகிக்கும் புதிய பதவிகள் குறித்த தகவல்களையும் அளிக்குமாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், இத்தகைய பதவிக்கால நீட்டிப்பு அல்லது மறுபணியமர்த்தல்வழங்கப்படுவதற்கு ஒன்றிய அரசு எந்த அளவுகோல்களைப்



பயன்படுத்துகிறது என விளக்கம்அளிக்கவேண்டும் என அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய பணியாளர், பொது மக்கள்குறைகள்மற்றும்ஓய்வூதிய அமைச்சகத்தின் இணை அமைச்சர் மற்றும் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், ஓய்வு வயதைத் தாண்டி சேவை நீட்டிப்பு வழங்குதல் அல்லது ஓய்வுக்குப் பிறகு மறுபணியமர்த்தல் செய்வது தொடர்பான விவகாரங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும்துறைகளால்பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றன.

மேலும், இத்தகைய முடிவுகள்அடிப்படைவிதிகளில் உள்ள நடைமுறைகளின் படி, சில விசேஷ சூழ்நிலைகளில் பொதுநலன் கருதி எடுக்கப்படுகின்றன என்று அவர் விளக்கமளித்தார்.



2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் சட்டத்துறை அலுவலகத்தை (War Room) மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., காம்தார் நகர் மெயின் ரோடில் நேற்று (16.3.2026) திறந்து வைத்தார். உடன் பகுதி செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வே.தேவேந்திரன், வட்டக்கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.